பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ஆல் ஐப்பசி மீ 1960 அக்டோபர் மீ | பகுதி 7

பொருளடக்கம்

		பக்கம்
பத்திராதிபர் குறிப்புகள்	...	123
அண்ணல் காந்திக்கு அமெரிக்கா அஞ்சலி	...	126
நாகரிகத்தின் போக்கு	...	127
இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்தல்	...	128
புத்தகங்களைப் படிப்பதில் குழந்தைகளுக்கு ஆர்வம் ஊட்டுதல்	...	129
" ஒரு வழி " (பாட்டு)	...	130
ஜெர்மனியில் கல்வி	...	131
செய்தித் திரட்டு	...	133
பணம் முளைக்குமா ? (பாட்டு)	...	135

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 — தனிப் பிரதி 25 ந.பை.

பாலர் கல்வி

தொகுதி 25	சார்வரி ஆண்டு ஐப்பசி மீ 1960 அக்டோபர் மீ	பகுதி 7

பத்திராதிபர் குறிப்புகள்

தேசப்பிதாவின் திட்டம்

தேசப் பிதா காந்திஜீயின் பிறந்த தினமாகிய அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி நம் நாடு பூராவும், அன்னிய நாடுகளிலும் பல நற்செய்கைகளை ஆரம்பித்தோம். தெருவின் சுத்தத்திலிருந்து மனதின் சுத்தம் வரை பற்பல நல்ல காரியங்கள் செய்யப்பட்டன.

கல்வி விஷயத்தில் காந்திஜி ஒரு திட்டமிட்டார். அத்திட்டம் சென்ற 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருந்தால், சமூக நிலை இன்று வேறு விதமாக இருக்கும். சமூகப் புனரமைப்பே கல்வித் திட்டமாக ஆதாரக் கல்வித் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

இத்திட்டம் ஓரளவுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறதே யொழிய, பூராவும் அமுலாக்கப்படவில்லை. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டகட்டத்திற்கு அனேகமாக வந்தும் எல்லா ஆரம்பப் பள்ளிகளும் ஆதாரப் பள்ளிகளாக மாறிவிடும் என்று சொல்ல முடியாத நிலையிலிருக்கிறோம். Training (ஆசிரியர் பயிற்சி) பள்ளிகள் ஆதார முறைக்குப் பூராவும்மாறி, ஆசிரியர்கள் ஏராளமான எண்ணிக்கையில் பயிற்சிபெற்ற பிறகுதான் ஆரம்பப்பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவதென்பது சிக்கலானப் பிரச்னைகளை உண்டுபண்ணி வருகிறது. சாதாரண ஆரம்பப் பள்ளிகள் வேறு, ஆதார ஆரம்பப் பள்ளிகள் வேறு, சாதாரண ஆசிரியர் பயிற்சிவேறு, ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி வேறு, என்ற வகையில் இரு பிரிவினரை உண்டாக்கி சிக்கலானப் பிரச்னைகளை எழுப்பி வருகிறது.

ஒரே கோடை விடுமுறை காலத்தில் தகுந்த அதிக ஊதியத்துடன் இப்பொழுதுள்ள ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கட்கு ஆதாரக் கல்வி பயிற்சி கொடுத்தால் அடுத்த வருடமே எல்லா ஆரம்பப் பள்ளிகளும் ஆதாரக் கல்வி பள்ளிகளாக மாறி விட முடியும். சர்க்கார் ஆவன செய்வார்களா?

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமும் கல்வியும்

கல்விக்கு மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திலும் முக்கியத்துவம் அளிக்கப்படாதது வருந்தத் தக்கது. கல்வி எந்த மூலதனச் செலவைக் காட்டிலும் சிறந்த பலனை யளிக்குமென்பதை யாரும் மறுக்க முடியாது. அணைகளும், பாசன மின்சாரத் திட்டங்களும் அவசியமில்லையென யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனல், அவைகளைவிட முக்கியம் கல்வித்திட்டம் என்பதை நாம் மறுக்க முடியாது.

நாம் மூலதனச் செலவுத் திட்டங்களை வருங்கால மக்களுக்காகவே நிறைவேற்றுகிறோம். அந்த வருங்கால மக்கள், தேசாபிமானத்துடன் சகோதர மனப்பான்மையுடன் சுயநலம் கருதாது இருந்தாலொழிய இத் திட்டங்களின் முழுப் பலன் நாட்டிற்குக் கிட்டாது. அப்படிப் பட்ட நற்குணங்களைப் புகட்டுவது கல்வியே. கூலிக்கு வேலை செய்த நாள் போய் தேசத்திற்கு வேலை செய்யும் நாள் இது. சம்பாத்தியத்திற்குத் தகுந்தபடி உழைத்த நாள் போய் உன்னத நோக்கத்துடன் உழைக்க வேண்டிய நாள் இது. பயந்து வேலை செய்த நாள் போய் அன்புடன் வேலை செய்யவேண்டிய நாள் இது. நம் உழைப்பின் பலன் பிற நாட்டை யடைகிறதேயென்று எண்ணியதுபோக நம் உழைப்பின் பலன் பூரா

வும் நம் நாட்டினரையே அடைகிறது என் கிற திருப்தி உண்டாக்கும் நாள் இது. இப் பேர்ப்பட்ட புதுக் கருத்துக்களை யூட்டி வளர்க்கப்பட வேண்டியது வருங்கால சமூகம். அவ்வேலையில் ஈடுபட்டிருப்ப வர்கள் ஆசிரியர்கள்.

இந்த ஆசிரியர்கள் மூன்ரும் ஐந் தாண்டு திட்டத்தில் எவ்வளவு கவனிக் கப்பட்டிருக்கிருர்கள் என்று ஆராய் வோம்.

ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் செலவழிக்கப் போகும் இத் திட்டத்திலும் ஆசிரியர் வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் பெற வழி செய்யப்படவில்லை. எளிய வாழ்க்கைக்குப் போதுமான ஒரு ஊதியம், மனே அமைதியுடன் வேலை யில் முழு கவனத்தை செலுத்தத் தூண் டும் ஒரு ஊதியம் ஆசிரியருக்குக் கிடைக்க வழி செய்யப்படவில்லை. வள ரும் பயிரைக் காப்பாற்ற வேலியைப் பலப்படுத்துவது போல், வளரும் பயிரான வருங்கால மக்கள் வளர ஆசிரியர் நிலை யைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் உண்டு.

யாருக்கும் வேலை நிரந்தரம் உண்டு. ஆனல் ஆசிரியர்களில் ஆயிரக் கணக் கான பேர்களுக்கு வேலை நிரந்தரம் கிடையாது. ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறைக்கு முன் வேலையிழப் பவர் நூற்றுக் கணக்கான பேர்கள். வருட நடுவிலும் வேலை யிழப்பவர்கள் பலர் உண்டு. வேலை நிரந்தரத்திற்கும் வழி ஒன்றும் செய்யப்படவில்லை.

நாட்டில் சமத்துவம் விளங்க பாடு படும் நாள் இது. அப்படி யிருந்தும் ஒரே யோக்யதாம்சமுள்ள ஆசிரியர்கள் நிர்வாக வேறுபாட்டின் பெயரால் வீட்டு வாடகை, வைத்திய வசதி, பென்ஷன் கிராக்கிப் படி மறுக்கப்படுகிருர்கள். இது திட்டகாலத்தில் சரி செய்யப்படாவிட் டால், பின் எப்பொழுதுதான் முடியும்?

லக்ஷக்கணக்கான அதிகப்படி பிள்ளை களைப் பள்ளியில் சேர்க்க திட்டமுண்டு. ஆயிரக் கணக்கான அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமுண்டு. ஆனல் குழந்தைகள் குணத்தில் முன் னேறத் திட்டமில்லை. படிப்பு தரத்தி லுயரத் திட்டமில்லை. ஆசிரியர் குழந்தை களைக் கவனிக்கும் அளவில் திட்டமில்லை. வகுப்பில் 20, 25 மாணவர்களுக்கு மேல் போகாமல் கணக்கிட்டு கல்வி விஸ்தரிப் பையும் செய்யத் திட்டமில்லை.

பாடத் திட்டத்தை தேசீய மயமாக்கி ஆசிரியர் ஊதியத்தை உயர்த்தி, பாட நேரத்தைக் குறைத்து, இரண்டு மடங்கு குழந்தைகள் படிக்க வசதி செய்யும் படித் திட்டத்தில் வழி செய்வது சாத் தியமே.

சர்க்கார் செய்யுமென எதிர்ப் பார்க் கிருேம்.

கல்வி வாரம்

இவ்வருஷம் நவம்பர் 7 தேதியிலிருந்து 12 தேதி முடிய கல்வி வாரம் கொண்டா டப்படுவதாக இருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 'மூன்ரும் ஐந்தாண்டுதிட்ட மும் கல்வியும்' என்பதுபற்றி ஆராய்ந்து அந்த வாரத்தில் ஒருநாள் பெற்ருேர்களை அழைத்து ஆசிரியர்களின் அபிப்பிராயங் களை யெடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிருேம்.

அடியிற்கண்ட குறிப்புகள் உதவிகர மாயிருக்கும்:—

(1) கட்டாய ஆரம்பக் கல்வி
(2) பகல் உணவும் ஆஜர் எண்ணிக் கையும்
(3) பாடதிட்டமும் மாறுதலின் அவ சியமும்
(4) ஆசிரியர் மாணவர் விகிதம்
(5) பாடதிட்டமும் வாழ்க்கைத்தேவை களும்
(6) புத்தகங்களும் கீழ் வகுப்புகளில் அவைகளின் அவசியமும்
(7) ஆசிரியரின் ஊதியமும், சமூகத் தின் கடமையும்

சம்பளக் கமிஷன் சிபார்சுகளும் சர்க்கார் உத்திரவும்

1-6-1960 முதல் அடியிற்கண்டபடி சம்பளம் ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி ஆரம்பப் பள்ளிகளில் உண்டு. இதைத் தவிர கிராக்கிப்படி ரூ. 10.

		Rs.
லோயர் கிரேடு ஆசிரியர்கள்	—	55-1-70
ஹையர் கிரேடு ஆசிரியர்கள்	—	65-1-70-2-90
செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்	—	90-4-110-3-140
Pre-Vocational Instructors.		
30-1-50–அல்லது 30-1-45 வாங்கியவர்களுக்கு		65-1-70-2-90
25-½-30 வாங்கியவர்களுக்கு	—	55-1-70
Sewing Mistress, Craft Instructors, Urdu Teachers, Music Teachers, Weaving Instructors, Spinning Instructors and Swimming Instructors		
30-1-50 அல்லது 30-1-45 வாங்கியவர்களுக்கு		65-1-70-2-90
Headmasters or Head-Teachers		90-4-110-3-140 with duty allowance
45-3-60-2-90 அல்லது 45-2-85	,,	90-4-110-3-140 with duty allowance

1-6-1960 முதல் அடியிற் கண்டபடி கிராண்டு உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் உண்டு. இதைத் தவிர கிராக்கிப் படி ரூ. 10.

		Rs.
லோயர் கிரேடு	(Untrained)	55
,,	(Trained)	55-1-70
ஹையர் கிரேடு	(Untrained)	65
,,	(Trained)	65-1-70-2-90
செகண்டரி	(Untrained)	90
,,	(Trained)	90–4-110-3–140
Pre-Vocational Instructors:—		
Full-Time Instuctors-Fully Qualified		65-1-70-2-90
(1) With Technical but *not* General Educational qualification		55-1-70
(2) With general educational qualification (*Proficient* in the Pre-Vocational Subject)		55 per mensem

பஞ்சாயத்துப் பள்ளிகளில் கொடுத்து வரும் ரூ. 3 நிறுத்தப்படும்.

சம்பள நிர்ணயமுறை ‘ பாலர் கல்வி ’ சார்வரி வருடம் ஆடி மாதம் இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட குறிப்புகள்- உத்தேச செலவு

அகில இந்தியத் திட்டம்

மொத்தச் செலவு ரூபாய் 10,200 கோடி.
கல்விக்கு ஒதுக்கப்பட்டது—**500** கோடி

ஆரம்பக் கல்வி.	180	கோடி
மத்தியதரக் கல்வி	90	கோடி
கல்லூரிக் கல்வி.	75	கோடி
மற்றத்திட்டங்கள்	25	கோடி
	370	கோடி.
Technical Education	130	கோடி.

சென்னை இராச்சியத் திட்டம்

மொத்தச்செலவு	ரூ. 398·82 கோடி
கல்விக்கு ஒதுக்கப் பட்டது	ரூ. 44·2 கோடி
பொதுக் கல்விக்கு	ரூ. 35 கோடி
TechnicalEducation-க்கு சுமார்	ரூ. 9 கோடி
மின்சாரத்திற்கும் பாசனத்திற்கும்	ரூ. 158·1 கோடி
விவசாயத்திற்கும் சமூக அபிவிருத்திக்கும்	ரூ. 78·04 கோடி
தொழில்.	ரூ. 38·18 கோடி
குடித்தண்ணீர் & சுகாதாரம்	ரூ. 30·92 கோடி

போக்குவரத்துக்கும் செய்தித்தொடர்புக்கும் ரூ. 13·77 கோடி

பின்தங்கிய வகுப்பினருக்கு நலன் ரூ. 15·85 ”

சமூக நலன், தொழிலாளர் நலன், வீட்டு வசதி ரூ. 19·76 ”

கல்வி திட்டத்தின் விவரம்

ஆரம்பக் கல்வி	ரூ. 22 கோடி
மத்தியதரக் கல்வி	,, 10·4 ,,
பல்கலைகழகக் கல்வி	,, 0·6 ,,
இதர திட்டங்கள்	,, 2·00 ,,

ஆரம்பக் கல்வி

6 முதல் 11 வயது வரையுள்ள மேலும் 17 இலட்சம் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் இவ்வயதுள்ள எல்லா குழந்தைகளும் பள்ளியில் சேர்ந்தவராவார்கள். இராச்சியத்தை மூன்று பாகங்களாகப் பிரித்து 1960—61, 1961—62, 1962—63 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் ஒரு பாகம் வீதம் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

செலவு

கட்டாய ஆரம்பக்கல்வி ரூ.14 கோடி

பகல் உணவுத்திட்டம் 5 வருடத்திற்கு சுமார் ரூ. 8 கோடி.

அண்ணல் காந்திக்கு அமெரிக்கா அஞ்சலி

“விடுதலை வீரர்” தபால் தலை வெளியிடப்படும்

வாஷிங்டன், அக். 2-மக்கள் குலத்தின் விடுதலை வீரர்களில் ஒருவர் மகாத்மா காந்தி என்று நினைவுறுத்த அடுத்த ஜனவரியில் அமெரிக்கா இரு தபால் தலைகள் வெளியிட்டுச் சிறப்புச் செய்யும்.

யு. எஸ். போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆர்தர் இ. ஸம்மர்பீல்டு வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பில் மதிப்புக்குரிய இந்தியப் பெரியார் மகாத்மா காந்தியின் 91-வது பிறந்த நாளை ஒட்டி அவருக்குச் சிறப்புச் செய்வதன் பொருட்டு, “விடுதலை வீரர்” வரிசைத் தபால்-தலைகள் வெளியிடப் பெறும் என்று கூறுகிருர். “சுதந்திரம் கடவுள் தந்த கொடை....ஒவ்வொரு நாட்டின் உரிமை” என்பது மகாத்மாவின் வாக்கு. 4 சென்ட், 8 சென்ட் காந்தி தபால்-தலைகள் இந்தியாவின் குடியரசுத் திருநாளான 1961, ஜனவரி 26-ந் தேதி வாஷிங்டன் நகரில் வெளியிடப்பெறும். “காந்திஜி” என்று இந்திய நாட்டு மரியாதைச் சொல்லில் மகாத்மா பற்றி ஸம்மர்பீல்டு குறிப்பிடுகிருர். அவர் கூறுகிருர்: “மெலிந்த மனிதராக உலகம் அறிந்த காந்திஜி இந்தியாவுக்கு விடுதலை தேடித்தந்தார். சுதந்திர வாழ்வில்தான் இந்திய மக்கள் மாண்பும், வளமையும், சமூக நீதியும், தன் முயற்சியால் இலட்சிய நிறைவும் காணமுடியும் என அவர் நம்பினுர்.

உலகுக்கே ஒளி விளக்கு

“மனித இயல்பிலும், சுதந்திரத்தில் மனிதருக்குள்ள ஈடுபாட்டிலும் காந்திஜி கொண்டிருந்த நம்பிக்கை இந்தியாவுக்கு மட்டுமின்றி, மக்கள் குலம் முழுமைக்குமே உள்ளொளியூட்டியது. ‘ஸ்வராஜ்’ (சுதந்திரம்) - ‘சத்யாக்ரஹம்’ (சாத்வீக எதிர்ப்பு) ‘சர்வோதயா’ (அனைவருக்கும் நன்மை)-ஆகிய கொள்கைகள் அவர் நன்கு பலப்படுத்தியவை. வீரமும், மாண்பும் பிறப்பதற்காக அவர் கடைப்பிடித்தவை; அன்று அவை உலகுக்கு உள்ளொளியூட்டும் அருள் வாக்குகளாக விளங்கின; இன்று உண்மையான சுதந்திரம் இன்னமும் கைகூடாத ஒரு உலகில் சத்தியத்தையும் சாமாதானத்தையும் நாடுவோர் அனைவருக்கும் அவர் வைத்துப்போன அரும்பொற்குவியலாக அவை விளங்குகின்றன.”

“விடுதலை வீரர்கள்” தபால் தலை வரிசையில் முன்பே சிறப்பிக்கப்பட்டுள்ள தேசபக்தர்களாவர்: ராமன் மாக்ஸேஸே (ஆகஸ்ட் 31, 1957), ஸைமன் பொலிவார் (ஜூலை 24, 1958), லாஜாஸ் கொஸ்ஸத். (செப்டம்பர் 19, 1958): ஜோஸ் டெஸான் மார்ட்டின் (பிப்ரவரி 25, 1959) ஏர்னஸ் ராய்ட்டர் (செப்டம்பர் 29, 1959), தாமஸ் மஸாரிக் (மார்ச் 7, 1960). இந்த ஆண்டு “விடுதலை வீரர்” தபால் தலை வரிசையில் சிறப்புப் பெற இருக்கும் பிற பெரியார்கள், இக்னுஸி ஜான் பாடரூவ்ஸ்கி (அக்டோபர் 8, 1960), குஸ்டாப் மானர்ஹீம் (அக்டோபர் 26, 1960) கரிபால்டி (நவம்பர் 2, 1960).

நாகரிகத்தின் போக்கு

G. கிருஷ்ணமூர்த்தி M.L.C.

சிறுவயதில் 1 முதல் 100வரை விரல்களைக் கொண்டே எண்ணி வாய்ப்பாடு எல்லாம் மனப்பாடம் பண்ணினதுபோக 1 முதல் 10 வரை எண்ணுவதற்கு மணிச்சட்டம் உபயோகிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. துருவன் பிறந்த நாட்டிலே பாலனுய்த் தவம் செய்த நாட்டிலே, ஐம் புலன்களும் தேர்ச்சி பெற்று பிறக்கும் குழந்தைகளுள்ள இந் நாட்டிலே வெளி நாடுகளில் ஐம்புலன்கள் சரியான தேர்ச்சி பெருத குழந்தைகளுக்கும், குறைவுடன் பிறந்த குழந்தைகளுக்கும் ஏற்பட்ட முறைகளை அனுஷ்டிக்கும் காலம் வந்துவிட்டது. மில்களில் வேலை செய்யும் ஸ்திரீகளின் இரண்டு வயது குழந்தைகளுக்கு ஏற்பட்ட Creche என்ற பள்ளிக்கூடங்கள் வீட்டிலிருக்கும் சகல தாய்மார்களின் குழந்தைகளுக்கும் தேவையாக நினைக்கும் காலம் வந்து விட்டது. பச்சை, சிவப்பு, நீல நிறமுள்ள விளையாட்டுக் காய்களையும், சாமான் களையும் வீட்டிலேயே வைத்துக்கொண்டு விளையாடியது போக, இதே சாமான் களைப் பள்ளிக்கூடங்களில் வைத்துக் கொண்டு விளையாட மாதம் ரூ. 5-ம், 6-ம் சம்பளம் கொடுக்கும் காலம் வந்துவிட் டது. 2 மணி, 2½ மணி நேரத்தில் படித்து முடிக்கக்கூடிய பாடங்களை 4½ மணி, 5 மணி நேரம் கூட்டம் நிறைந்த அறை களில் குழந்தைகள் அடைப்பட்டுப் படிக்க வேண்டிய அவசியம் வந்துவிட் டது. குழந்தைகளிருக்கும் ஊரைப்பற்றி யும், சுற்று வட்டாரங்களைப் பற்றியும் விபரமாய்ப் படிக்காமல் அயல் நாட்டு விவரங்களைப் படிக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டது. சாப்பிடும் உப்பைக் குழந்தைகள் பார்ப்பதற்காக, கடும் வெயி லில் ஒரு ஆசிரியர் 40, 50 குழந்தைகள் வீதம் சாரி சாரியாகக் குழந்தைகளை ஒரு மைலுக்கப்பாலுள்ள கடைத் தெரு விற்கும், சந்தைக்கும், குப்பைத் தழை களை மிதித்துக்கொண்டு கூட்டிச் செல்ல வேண்டிய அவசியம் தோன்றிவிட்டது. மைதானங்களில் மாலையில் விளையாடியது போக பகல் 11 மணிக்கும், 12 மணிக் கும் கடும் வெயிலில் குழந்தைகளுக்கு Drill நடத்தும் கட்டத்திற்கு வந்துவிட் டோம். குழந்தைகளுக்கு நீதி புகட்டக் கூடிய புராணக் கதைகள் சொல்லிக் கொடுத்ததுபோக, அர்த்தமற்ற நவநாக ரீகக் கதைகள் சொல்ல ஆரம்பித்து விட்டோம். ஒற்றுமை புகட்டக்கூடிய வகையில் நம் சரித்திரத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு பதில் இந்தியாவின் பல பாகத்தில் இருந்து வந்ததாகச் சொல்லும் தனித்தனி பிரிவுகளின் சரித்திரத்தைப் போதித்து வருகிறோம். குழந்தைகளை கடவுளிடம் பக்தி ஏற்படும் வகையில் கோவிலுக்கு அழைத்துச் சென்றது போக படக் காட்சிகளுக்கு அழைத்துச் செல்லும் பழக்கம் அதிகமாகி விட்டது. அஹிம்சையே உருவாகக் கொண்டு அவ தரித்த தேசப் பிதா காந்திஜீயின் நாட் டிலே பூச்சிகளைக் கொல்லும் மருந்து களும், பவுடர்களும் உபயோகிக்க வேண் டுமென்ற பாடங்களைப் படிக்கும் காலம் வந்துவிட்டது. சகல ஜந்துக்களும் கட வுள் சிருஷ்டி என்று நினைத்த நாட்டிலே மனிதர்களைத் தவிர மற்ற ஜந்துக்கள் வாழக்கூடாதென்ற எண்ணம் உதிக்கும் சூழ்நிலை வந்துவிட்டது. Reading, Writing, Arithemetic என்ற 3 R's கீழ்வகுப் புகளில் நன்றாகக் கற்றுக் கொடுத்தது போக, சகல வித பாடங்களும் புகுத்தப் பட்டு ஒன்றும் சரியாகத் தேர்ச்சி பெற முடியாத காலம் வந்துவிட்டது. எல்லா விஷயங்களையும் கற்று, ஆராய்ந்து பேச வேண்டுமென்ற நிலை போய், கீழ் வகுப்பு களிலிருந்தே பேச்சுத் திறமை என்ற பெயரில் குழந்தைகளை மேடை யேற்றும் காலம் வந்துவிட்டது. முறைகள் மாற வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் கேள்வி.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்தல்

இவன் கல்லூரிப் படிப்புக்குத் தகுதி உள்ளவனா? கணிதம், விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் வல்லவனாவானா? அல்லது கட்டடக் கலையில், மருத்துவத் துறையில் சிறந்து விளங்குவானா? என்று பள்ளி மாணவர்களின் தகுதிகளை மதிப்பிட்டு அறிவுரை கூறும் திட்டம் ஒன்று இப்பொழுது முதன் முறையாக அமெரிக்கா நெடுகிலும் உயர்நிலைப் பள்ளிகளில் நடந்து வருகிறது.

மாணவன் மனம் இயல்பாக எந்தத் துறையை நாடுகிறது என்பதை அறிந்து அதில் அவனைப் படிக்க வைத்தால் அவனுக்கு இயல்பாக திறமைகள் முழு வளர்ச்சி அடைய வழி உண்டாகும்.

மாணவர் தகுதி அறியும் சோதனைகளை ஆங்காங்குள்ள உள்ளூர்க் கல்விக் குழுக்கள் நடத்துகின்றன; இவற்றுக்கு மத்திய அரசாங்கம் உதவி புரிகின்றது. அமெரிக்க உயர்நிலைப் பள்ளிகளில் இன்று தொண்ணூறு லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய தனித் தனித் தகுதிகளை அறியவே இன்று திட்டம் நடைபெறுகிறது.

இனி, நாளடைவில் பன்னிரண்டு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைபட்ட நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இத்தகைய தகுதி அறியும் சோதனை நடக்கும்.

எவ்வகையான சோதனை நடத்த வேண்டும் என்று முடிவு செய்யும் முழு உரிமையும் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்ததேயாகும், கல்வித் துறை மாநில அரசாங்கங்களின் பொறுப்பு ஆதலால்.

ஆனால் எல்லாச் சோதனைகளுக்கும் முக்கிய அடிப்படையாக உள்ளன சில வகைகள்:

பிழைபடாமல் கோவையாகப் பேசும் திறனும் சொல்வளமும் எவ்வளவு என்று ஆராய்வது ஒன்று. இவ்வகையில் மிகுந்த திறனும் வேகமும் காணப்பட்டால், பையன் பொது நுண்ணறிவு மிகுந்தவன் என்றும், படிப்பில் சிறந்து விளங்குவான் என்றும் புலப்படும்; இவன் கல்லூரிப் படிப்புக்குத் தகுதி நிரம்பியவன்.

எண்-வரிசை எனப்படும் சோதனைகள் சில உண்டு; கணிதம், பௌதிகம், இரசாயனம், பொறியியல் ஆகியவற்றில் திறமை உள்ளவனை இச் சோதனைகள் எடுத்துக் காட்டும்.

இதே போல் மின்னணுக் கருவிகள் உதவியால் கணக்குத் தீர்க்கும் துறைகளில் திறமை உண்டா என்று காட்டும் சோதனைகள் உள்ளன; எவ்வளவு சிக்கலான இயந்திரங்களையும் இயக்கக்கூடிய திறமையைப் புலப்படுத்தும் சோதனைகளும் உள்ளன.

முப்பரிமாண நிலைமையைத் தெளிவாக மனத்தில் கொண்டு சிந்திக்கும் திறமையை மதிப்பிடும் சோதனைகள் மாணவன் கட்டடக் கலைஞனாக, டிராப்ட்ஸ்மனாக, உரு அமைப்பு வகுப்பவனாக, அறுவை மருத்துவனாகச் சிறந்து விளங்குவானா என்பதைக் காட்டும்.

திறமைகளைக் கண்டுபிடித்து விட்டால் மட்டும் போதாது. அவற்றை விருத்தி செய்து கொள்ள வழியும் காட்ட வேண்டும். ஆகவே, மாணவருக்கு இவ்வாறு தக்க அறிவுரைகளைக் கூறி வழிப்படுத்தும் தீவிரமான திட்டம் ஒன்றும் நடைபெறும். பெற்றோர்கள் பிள்ளைகளின் திறமைகளையும் குறைபாடுகளையும் உணர்ந்து ஒத்துழைப்பது அவசியமாகும்.

எவனுக்கு எந்தத் தொழில் சரிப்படும் என்று கண்டு வழி காட்டுவதோடு கல்வி முற்றுப்பெற்றுவிடாது. மக்கள் அறிவு ஒரு சார்பான வளர்ச்சியடையாமல், அவர்கள் நாலும் தெரிந்தவர்களாக நல் வளர்ச்சி அடையவும், அவர்கள் நுண்ணறிவு கூர்மை பெறவும் வகை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தற்கால உலகின் பிரச்னைகளைத் தீர்க்க வழி கிடைக்கும்.

(Extract from USIS-Press Feature)

புத்தகங்களைப் படிப்பதில் குழந்தைகளுக்கு ஆர்வம் ஊட்டுதல்

ஷூ - சூங்

[EXTRACTS]

ஒரு விசாலமான வாசக சாலையின் சுவர்களில் காகிதத் துண்டுகள் தொங்க விடப்பட்டிருந்தன. குழந்தைகள் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தன. 9 வயதான சிஉற்சுவான் அக்காகிதத் துண்டுகளில் ஒன்றில் பின்வருமாறு எழுதியிருப்பதைக் கண்டான்: "தங்க மீன் தனது உடல் நலம் குறைவுற்றது பற்றி நண்டு வைத்தியரைக் கலந்தாலோசிக்கிறது"—இது ஒரு புத்தகத்தின் பெயர். அவனுக்கு ஒரே குஷி. உடனே அந்தக் காகிதத் துண்டை கிழித்து எடுத்துக் கொண்டு, நூல் நிலைய ஊழியரிடம் ஓடினன்.

" 'தனது பற்களை இழந்துவிட்ட தங்க மீன்' பற்றிய கற்பனைக் கதையின் பெயர் அது" என்று அவன் நூல் நிலைய ஊழியரின் கேள்விக்குப் பதிலுரைத்தான். "நிறைய இனிப்புப் பண்டங்களை உண்டு தனது பற்களைக் கெடுத்துக்கொண்டு, பிறகு நண்டு வைத்தியரிடம் ஓடிய தங்க மீனின் கதை" என்று அவன் மேலும் விளக்கம் கூறினன்.

நூல் நிலைய ஊழியர் முறுவலித்தவாறே, "சமத்துப் பையல். சரியாக ஊகித்துவிட்டாயே!" என்ருர்.

இந்த விளையாட்டு, குழந்தைகளை ஊகிக்கத் தூண்டுவதற்காக பீகிங் சிறுவர் நூல் நிலைய அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறுவர்களுக்கு புத்தகங்களின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்காக இந்த விளையாட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விளையாட்டின்போது புத்தகங்களின் பெயர், ஆசிரியர்களின் பெயர், புத்தகங்களின் உள்ளடக்கம் முதலியவை பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டன. அங்கிருந்த 500 "கேள்வித் தாள்களில்" 400-க்கு மேற்பட்டவற்றிற்கு சிறுவர்கள் சரியான பதில் அளித்தனர்.

சிறுவர்களின் புத்தக அபிமானத்தைப் பெருக்குவதற்கு கையாளப்படும் பல வழிகளில் ஒன்றேயாகும் இது. சிறுவர்களின் வயுதைக் கணக்கில் கொண்டு நூல் நிலைய அதிகாரிகள் பல வழிகளில் சிறுவர்களுக்கு வழிகாட்டி வருகின்றனர்.

முதலாவது படிவ மாணவர்கள் முதன் முறையாக நூல் நிலையத்திற்கு வரும்போது, நூல் நிலைய ஊழியர் அவர்களை நூல் நிலையம் பூராவையும் சுற்றிக் காட்டிவிட்டு, நூல் நிலைய விதிகளையும், புத்தகங்களை எவ்வாறு வாங்கிச் செல்வது என்பது பற்றியும் விளக்கிக் கூறுகிருர். சில சமயங்களில் சில சித்திரக் கதைப் புத்தகங்களை நூல் நிலைய ஊழியரே, சிறுவர்களுக்குப் படித்துக் காட்டுகிருர்.

மூன்ருவது அல்லது நான்காவது படிவம் மாணவர்களுக்கு ஒரு புத்தகத்திலுள்ள முக்கியமான பகுதிகளைப் படித்துக் காட்டுவது அல்லது அப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எடுத்துரைப்பது போன்ற வழிகளில் புத்தகப் படிப்பு ஆர்வத்தைக் கிளறிவிடுகிருர், நூல் நிலைய ஊழியர். உதாரணமாக, "மூளையைப் பயன்படுத்தத் தவறிய சிறுவன்" என்ற புத்தகத்தை சிபாரிசு செய்யும்போது நூல் நிலைய ஊழியர் பின்வருமாறு கூறக்கூடும்: "ஒரு பையன் அடி முட்டாளாகி பரிகசிக்கத்தக்க நிலையை அடைந்தது பற்றிய கதை இது. இதுபற்றி நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல், நீ இதை கவனமாகப் படிக்கவேண்டும்."

ஆருவது, ஏழாவது படிவ மாணவர்களும் நடுநிலைப் பள்ளி மாணவர்களும் சிக்கல்கள் நிறைந்த நீண்ட நாவல்களைப் படிக்க விரும்புவர். சில சமயங்களில் வயது வந்தோருக்கான புத்தகங்களையும் அவர்கள் வாங்கிப்படிப்பர், அவர்களுக்கு அது அவ்வளவாகப் புரிய முடியாது என்றபோதிலும்! எனவே, இது போன்ற நிலைமைகளில் நூல் நிலைய அதிகாரி இப் புத்தகத்தின் ஆசிரியரைத் தருவித்து

அதன் கருத்தை சிறுவர்களுக்கு விளக்கு வதற்கு ஏற்பாடு செய்வார்.

சில சிறுவர்களின் புத்தக ஆர்வம் குறுகியதாக இருப்பதைக் காணலாம். ஒரு குழந்தை, நட்சத்திரங்களைப் பற்றி மட்டுமே படிக்க விரும்பியது. அச்சிறுவன் கோரிக்கைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்தபின், அவனது ஆர்வ வட்டத்தைப் பெருக்குவதற்காக, வேறு சில தலைப்புகளிலுள்ள புத்தகங்களைப் படிப்பதற்கான யோசனைகளை நூல் நிலைய அதிகாரி கூறினார்.

இந்த நூல் நிலையம் நகரிலுள்ள எல்லாச் சிறுவர்களுக்குமானது. 16 வயதிற்குக் குறைந்தவர்கள் அனைவரும் இங்கு புத்தகங்களை எடுத்துச் செல்லலாம். தினசரி சுமார் 1000 சிறுவர்கள் இங்கு வருகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் இன்னமும் அதிகமானவர்கள் வருவதுண்டு. சில சிறுவர்கள் நூல் நிலையத்திலேயே படிக்க விரும்புவர். மற்றும் சிலர் தமது வீட்டிற்கு எடுத்துச்சென்று படிக்க விரும்புவர். மாதம் தோறும் சுமார் 200,000 புத்தகங்கள் இங்கு வினியோகிக்கப்படுகிறது. புதிய புத்தகங்கள் பற்றி சினிமா ஸ்லைடுகள் போட்டுக் காட்டுவது, சுவர்ச் செய்தித் தாள்களில் விமரிசனங்கள் எழுதுவது, புதிய புத்தகத்தின் கதையை எடுத்துரைப்பது போன்ற வழிகளில் சிறுவர்களின் கவனம் ஆகர்ஷிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கான "நூல் நிலைய விளையாட்டு"களில் ஒன்று கதையில் வரும் கதா பாத்திரங்களைப் போல் நடிப்பதாகும். இவ்வாறு நடிக்கும் குழந்தைகள் தமக்குரிய வசனத்தைப் புத்தகத்திலிருந்து மனப்பாடம் செய்வர். மேலும் தமது உள்ளத்தைத் தொடும் ஒரு புத்தகம் பற்றிய கவிதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் குழந்தைகள் எழுதுவதுண்டு. இதன்றி புத்தகத்தின் கருத்தை சித்திரமாக வடிப்பதிலும் சில சிறுவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த ஆக்கப் படைப்புகளை நூல் நிலையம் சேகரித்து, மற்ற குழந்தைகள் இவற்றைக் கண்ணுறும் பொருட்டு கண்காட்சிகள் நடத்துவது வழக்கம்.

"ஒரு வழி"

ஆ. வேலுமணி

கல்லெடுத்து வடிசமைத்த கன்னித்தமிழ் பரம்பரையோய்
வில்கொடுத்து தன்மகனை வேல்விழியாள் போவென்றாள்
நெல்விளையும் மணிநாட்டாய் நின்நாட்டு மண்வளமோ
செங்குருதி மண்ணிலோடி வீரமணமே பரப்புமென
மங்காத புகழுடைத்த மறத்தமிழர் குடியோரே
பொங்கிடும் பெருநிலவின் பொழிவுற்ற வழியோர்கள்
கண்ணின்று நீர்சிந்தி கதியற்ற ஏழைகளாய்
மண்ணதில் பிறந்துமே மகவுகளை விலைகொடுக்க
எண்ணியே கதறுகிறார் ஏங்கியே தவிக்கின்றார்.
உழைப்பாளி வர்க்கமே உண்ணவே உணவின்றி
பிழைப்புக்கு வழிதேடி பெருந்துயர் அடைகின்றார்
விழைகிறார் யார்யாரோ நம்நாட்டை நம்பியவர்
செல்வர்களாய் காட்சியுற்று சீர்சிறக்க வாழுகிறார்.
கல்வியே இல்லாது கதறுகிறார் நம்மக்கள்
வல்லமைரோ! கல்விப்பாலூட்ட காணுங்கள் ஒருவழியை.

ஜெர்மனியில் கல்வி

கல்வி முறை பற்றியும், கல்வி போதனை யில் என்னென்ன விஷயங்கள் அடங்கி யிருக்கவேண்டும் என்பது பற்றியும் இந்தியாவில் இப்போது புதிதாகச் சிந் தனைகளும் விவாதங்களும், நடந்து வருகின்றன. தேஷ்முக் கமிட்டி போன்ற கமிட்டிகளும் மத்திய அர சாங்கத்து உள் விவகார மந்திரி ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் போன்ற சிந்தனை யாளர்களும் கல்விச் சீர்திருத்தம் சம்பந்த மாக அரிய யோசனைகளை வெளியிட் டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில், ஜெர்மனியில் இப்போது உள்ள கல்வி முறை பற்றிய விவரங்கள் இந்தியக் கல் வித் துறையினருக்குச் சிறந்த வழி காட்டிகளாக இருக்க முடியும்.

ஜெர்மனியின் கலாசார வாழ்க்கை பல வகையிலும் வளம் பெற்று விளங்கு வதற்கேற்ப, அதன் கல்வி முறையும் பல விதங்களில் அமைந்துள்ளது. ஜெர்மனி யில் "லாண்டர்" என்று அழைக்கப் படும் ராஜ்யங்கள் பல இருக்கின்றன. இந்த ராஜ்யங்கள் தங்களுடைய தனிப் பட்ட தேவைகளுக்குத் தகுந்த முறை யில் தங்கள் பிரதேசத்தில் கல்வி முறை யை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு ராஜ்யத்தில் படிக்கும் மாணவர்கள், வேறொரு ராஜ்யத்தில் உள்ள பள்ளிக் கூடங்களில் சேர்ந்து தங்கள் படிப்பைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பெரிய இடைஞ்சல் ஒன்றும் இல்லை.

இப்போது சுமார் 30,600 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற் றில் மொத்தம் 46,78,000 மாணவர்கள் படிக்கிறார்கள். 830 இடை நிலைப் பள்ளிக் கூடங்களில் 3,15,000 மாணவர்கள் பயி லுகிறார்கள். இதைப் போல் இரண்டு மடங்கு உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் கல்வி கற்கும் மாணவர் தொகை 7,68,000. ஆரம்பப் பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, பெரும் பாலான மாணவர்கள் தொழிற் பள்ளிக் கூடங்களில் சேருகிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்கள் சுமார் 7,000 இருக் கின்றன. இவற்றில் 26,00,000 மாணவர் கள் பயிற்சி பெற வசதி இருக்கிறது.

கல்வி கற்பதற்கு எல்லோருக்கும் சம வாய்ப்பு இருக்கவேண்டும் என்ற கொள் கை ஜெர்மனியில் நன்கு ஒப்புக் கொள் ளப்பட்டிருக்கிறது. சமவாய்ப்புக் கொடுப்பதென்றால், கல்வி போதனை இல வசமாக இருக்கவேண்டும், கல்விக்கு வேண்டிய சாதனங்களும் மாணவர் களுக்குக் கிடைக்கவேண்டும். எனவே ஜெர்மனியில் மாணவர்கள் பள்ளிக் கூடத்துக்குச் சம்பளம் கட்ட வேண்டிய தில்லை. புத்தகங்கள் வாங்கும் செலவும் கூடியமட்டும் அவர்களுக்கு இல்லாமல் தவிர்க்கப்படுகிறது. பெரும்பாலான ராஜ் யங்கள் இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண் டிருக்கின்றன. தொழிற் பள்ளிக்கூடங் களிலும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. சில ராஜ்யங்களில் நல்ல திறமையுள்ள மாணவர்களின் பெற்றோர் ஒரு குறிப் பிட்ட வரம்புக்கு மேல் வருமானம் இல் லாதவர்களாக இருந்தால், அந்த மாண வர்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. இதுதவிர, அகதிக் குடும்பங்களைச்சேர்ந்த இளம் மாணவர்களுக்கும், மேல்படிப்புப் படிக்கும் அல்லது தொழிற் கல்வி நிலை யங்களில் பயிலும் மாணவர்களுக்கும், கூடுதலாக உதவி மானியங்கள் வழங் கப்படுகின்றன.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆண், பெண் மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்தே படிக்கிறார்கள். ஆனால் பெரிய ஊர்களில் இரு பாலாருக்கும் தனித்தனிப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. ஆசிரியர் களில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆண்களே; ஆனால் இந்த விகிதம் இப் போது குறைந்து வருகிறது. பெண்களுக் கான உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் பல வற்றில் ஆசிரியைகள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

சென்ற உலகப் போருக்குப் பிறகு, 24,000 புதிய பள்ளிக்கூட அறைகள் கட் டப்பட்டிருக்கின்றன. ஆயினும் அகதி களும், வெளியேற்றப்பட்டோரும் வந்து குடியேறிக் கொண்டிருப்பதால், இன்னும் அதிக இடவசதி தேவைப்படுகிறது. இதன் விளைவாக வகுப்புக்களை "ஷிப்ட்" முறையில் நடைபெறவேண்டியிருக்கிறது. ஒரே அறையில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல பிரிவுகளுக்கு வகுப்புகள் நடத்தப்படு

கின்றன. இந்தியாவில் இருப்பதுபோல வே, ஜெர்மனியிலும், இடவசதிக் குறைவு காரணமாக ஆசிரியர்கள் அதிகமாக உழைக்கவேண்டி யிருப்பதோடு, பள்ளிக் கூட சாதனங்கள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன. சராசரியாக ஆரம் பப் பள்ளிக்கூடங்களில் ஒரு ஆசிரியர் 87 பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பட்டணங்களில் ஒரு ஆசிரியரின் பொறுப்பில் சுமார் 50 மாணவர்கள் படிக்கிறார்கள். பொதுவாக ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒவ்வொன்றிலும் 154 மாணவர்களும், மேல் நிலையில் உள்ள பள்ளிக்கூடங்களில் 500 மாண வர்களும் படிக்கிறார்கள்.

ஜெர்மன் மாணவர்கள் சுமார் 14 ஆண்டுகள் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கிறார்கள். உடல்நிலை காரணங்களால் ஒத்திப்போட நேர்ந்தாலன்றி, பிள்ளை களுக்கு 6 வயது நிரம்பியதும் கூடிய விரைவில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படு கிறார்கள். பதினெட்டாம் வயது வரை பள்ளிப் படிப்புத் தொடர்ந்து நடக்கும். ஆனால் கட்டாயமாக முழுநேரப் பள்ளிக் கூடம் போகவேண்டிய கால அளவு, சில ராஜ்யங்களில் 14 வயதுடனும், சில ராஜ் யங்களில் 15 வயதுடனும் முடிந்து விடு கிறது.

ஆறு வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில் சுமார் 80 சத வீதம் பேருக்கு ஆரம்பக் கல்வி கிடைக் கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் எட்டு அல்லது ஒன்பது "கிரேடுகள்" அல்லது வகுப்புகள் உண்டு. முதல் நான்கு வகுப்புகளும் ஆதாரப் பள்ளிக் கூடம் என்று சொல்லப்படும்; அடுத்த 4 அல்லது 5 வகுப்புகள் ஆரம்ப உயர் நிலைப் பள்ளிக்கூடம் என்று சொல்லப் படும். (முன்னதை சென்னை ராஜ்யத் தில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங் களுக்கும், பின்னதை ஆரம்ப உயர் நிலைப் பள்ளிக்கூடம் அல்லது நடுத்தரப் பள்ளிக்கூடத்துக்கும் ஒருவாறு ஒப்பிட லாம்). கட்டாயப் படிப்புக் காலம் முடிந்த பிறகு, மிகப் பெரும்பான்மை யான மாணவர்கள் தொழில் அப்ரென் டிஸ்களாகச் சேர்ந்து விடுகிறார்கள். தொழில்ப் பள்ளிக்கூடங்களில் சேரும் மாணவர்கள் அவற்றில் மூன்றாண்டுகள் கட்டாயமாகப் பயிலவேண்டும்.

மற்ற மாணவர்கள் இடை நிலைப் பள் ளிக்கூடங்களில் அல்லது உயர் நிலைப் பள்ளிக்கூடங்களில சேருகிறார்கள். இடைநிலைப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பிறகு, நிர்வாகத் துறையிலோ, வர்த்தகத் துறையிலோ, உத்தியோகம் பார்க்க வாய்ப்பு உண்டு. இடைநிலைப் பள்ளிக்கூடத்துக்குப் பதில் தொழில்ப் பள்ளிக்கூடதில் சேர்ந்திருந்தால், அதை முடித்தத் பிறகு, அந்தத் தொழிலில் சிறப் புப் பயிற்சி அளிக்கும் விஷயங்களில்சேர லாம். வர்த்தகம், சமூகத்துறை, கலைகள் முதலானவற்றில் கல்வி அளிப்பதற்கு பகுதி நேரக் கல்வி நிலையங்களும், முழு நேரப் பள்ளிக்கூடங்களும் இருக்கின் றன.

உயர்நிலைப் பள்ளிக்கூடப் படிப்பு ஒன் பதாண்டு நீடிக்கும். அதன் இறுதியில் நடக்கும் பிரீட்சை எழுதுவதற்குள் மாணவருக்குக் குறைந்த பட்சம் 19 வயது ஆகியிருக்கும். இதன் பிறகு பல் கலைக் கழகத்துக்குச் செல்லலாம். உயர் நிலைப் பள்ளிக்கூடப் படிப்பில் மூன்று வகைகள் இருக்கின்றன. கிரீக், லத்தீன் போன்ற புராதன மொழிகளில் முக்கிய கவனம் செலுத்துவது ஒரு வகை. நவீன மொழிகளை முக்கியமாகக் கற்பிப்பது மற்றொரு வகை. மூன்றாவது வகை, கணிதம், இயற்கை விஞ்ஞானம் ஆகிய வற்றில் சிறப்புப் பயிற்சி அளிப்பது. சென்ற ஒரு நூற்றாண்டுக் காலத்தில் உயர்நிலைப் பள்ளிகள், பல்கலைக் கழகத் துக்கு மாணவர்களைத் தயாரித்து அனுப் பும் நிலையங்களாக வளர்ந்திருக்கின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடப் படிப்பை முடித்துவிட்டு, இடைநிலைப் பள்ளியிலோ உயர்நிலைப் பள்ளியிலோ தொடர்ந்து படிக்கும் மாணவர்களில் சுமார் 15 சத வீதம்பேர்தனியார் நடத்தும் பள்ளிகளில் படிக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங் களை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. இவற்றில் சில பள்ளிக்கூடங்களில் மாண வர்கள் தங்கி யிருப்பதற்கான விடுதி வசதிகள் இருக்கின்றன.

(இன்ட்ரா)

செய்தித் திரட்டு

நாட்டறம்பள்ளி

வாணியம்பாடி சரகத்தைச் சார்ந்த நாட்டறம்பள்ளி ஆசிரியர் சங்க மையப் பள்ளிகளுக்கு பள்ளி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ள நன்கொடை பொருள்களின் "கண்காட்சி" 29-8-60 திங்களன்று நாட்டறம்பள்ளி மாவட்டக் கழக துவக்கப்பள்ளியில் நடைபெற்றது. காலையில் ஆசிரியர் திரு. A. C கந்தசாமி அவர்கள் தேசீயக் கொடி யேற்றினர். பொருட்காட்சி ஆசிரியர் திரு. T. M. செவத்தா கவுண்டர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்று மாலை நடந்த சிறப்புக்கூட்டத்திற்கும் ஆசிரியர் குழுவினர் நடித்த "சுடர்விளக்கு" என்னும் நாடகத்திற்கும் உயர்திரு. R. C. சாமண்ண கவுண்டர் M.L.A. அவர்கள் தலைமை தாங்கினர்கள். திரு. C. முனிசாமி, திரு. K. R. ராமசாமி ஐயங்கார், திரு. அ. இராமலிங்கம் B. Sc. B. T. பள்ளி ஆய்வாளர், திரு. இராதாகிருஷ்ணன் B. A. B. T. உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர், முன்னாள் சட்டமன்ற உருப்பினர். திரு. பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர் பள்ளி சீரமைப்புத் திட்டத்தைப்பற்றி விளக்கிக்கூறி பொது மக்களுக்கு நன்றி கூறி சொற்பொழிவு ஆற்றினர்கள். கூட்ட துவக்கத்தில் செயலாளர், திரு. R. வீராசாமி அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். கல்வித்துறையின் புதிய திட்டங்களுக்கு விளக்கம் கூறும் வகையிலும், ஆசிரியரின் தொண்டினை எடுத்துக் கூறும் தன்மையிலும், நாடக கருத்து அமைந்திருந்தது. கண் காட்சியிலும், கூட்டத்திலும், நாடகத்திலும், சுற்றுவட்டார கிராமவாசிகள் பெரும்பாலோர் பங்குகொண்டு சிறப்பித்தது குறிப்பிட தக்கது. கூட்டமுடிவில் ஆசிரியர், திரு. கனகராஜ் அவர்கள் நன்றி கூறினர்.

அரியூர்

29-9-60 அன்று அரியூர் இந்து உதவி ஆரம்பப் பாடசாலையில் சரஸ்வதி பூஜையும் பெற்றோர் சங்கமும் நடைபெற்றது. அவ்வமயம் பல பெற்றோர்கள் வந்திருந்தனர். பூஜைக்குப் பின் சந்தனம் தாம்பூலம் பொரி கடலை எல்லோருக்கும் வழங்கப்பட்டது. திரு நாராயணசாமி அய்யர், A.D. தலைமையில் கூட்டம்நடைபெற்றது. குழந்தைகள் தினந்தோறும் காலம் தவறுமல் பள்ளிக்கு வரவேண்டும். சுத்தம் அவசியம். படிக்கவேண்டும். உண்மையே பேசவேண்டும். பெற்றோர்கள் குழந்தைகள் செவ்வனே நடக்கிறர்களா என்ற கவனம் அவசிய வேண்டும் என்று பேசினர். திரு. ராமநாதன் வந்தனம் கூற கூட்டம் கலைந்தது.

நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல் திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ. P. லக்ஷ்மி நாராயணன், ஸ்ரீ D. அப்பாராஜ், ஸ்ரீ S. அனந்த நாராயணன் ஆகிய 3 ஆசிரியர்களும், 38 மாணவர்களும், 3-9-60 அன்று நாகபட்டிணம், நாகூருக்கு உல்லாசப் பயணமாகச் சென்றனர். நாகையில் இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில், துறைமுகம், கோயில்கள், மாதா கோயிலும், நாகூரில் பள்ளிவாசலும் பார்த்துவிட்டு 5-9-60 அன்று திருச்சி அடைந்தனர்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

18-9-60 ஞாயிற்றுக் கிழமையன்று வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில் சென்னை உயர்நிதி மன்ற நடுவர் உயர் திரு கே. வீராசாமி அவர்கள் தலைமையில் திருவள்ளுவன் திருவுருவப் படம் திறந்து வைக்கப் பெற்றது. சென்னை மாநிலத்தின் சட்டமன்றத் தலைவர் உயர்திரு டாக்டர் யூ. கிருஷ்ண ராவ் அவர்கள் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். கல்வித் துறையைச் சேர்ந்த டெபுடி டைரக்டர்களும், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, சென்னை முதலிய இடங்களைச் சேர்ந்த பெருமக்களும் வந்து விழாவிற் கலந்து கொண்டார்கள்.

பாடசாலையின் ஆட்சிமன்றத் தலைவரும், அமைச்சர் சபையினரும் தலைவர்களை வரவேற்றனர். வந்த பெருமக்கள் பாடசாலை, மணவர் இல்லம், தொழிற் சாலை ஆகியவைகளின் இடம் கட்டிட அமைப்புகளையும், ஆங்காங்கு மாணவர்

பெற்றுவரும் பயிற்சிகளையும் நேரிற் கண்டு மகிழ்ந்தனர். பின்னர் மாணவர்களுக்கு அளிக்கப் பெற்றுவரும் உடற் பயிற்சி, தொழிற் பயிற்சி முதலியவைகளையும் அவர்கள் கண்டனர். சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ந. சஞ்சீவி, எம். ஏ., அவர்கள் பாடசாலையின் சார்பில் வரவேற்பு வாசித்தளித்தனர்.

தலைமையேற்ற உயர் நீதிமன்ற நடுவர் பத்து வயதும் நிரம்பாத ஒருவருக்குப் படம் திறந்து வைத்தல் இதுதான் முதல் தடவை என்றும், திருவள்ளுவன் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினான் என்றும், நல்ல பண்புகளுடன் சிறந்திருந்தான் என்றும், பலதிறப்பட்ட பெருமக்களுடனும் நன்கு பழகும் சூழ்நிலை அவனுக்கு அமைந்திருந்தது என்றும், அப்படிப் பட்ட பெருந்தகையின் படம் பாடசாலையில் இருப்பது ஆயிரக் கணக்கான குழந்தைகள் அன்றாடம் பார்த்து, முன் மாதிரியாகக் கொண்டு உயர்வது எளிது என்றும் படத் திறப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்த பாடசாலையாரைப் பாராட்டினார்.

சபாநாயகர் டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் பிறகு படத்தைத் திறந்து வைத்தார்கள். திருவள்ளுவனுடைய குடும்பத்தோடு தமக்குள்ள தொடர்பையும், திருவள்ளுவனிடத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே தாம் வள்ளுவனிடம் கண்ட பண்புகளையும் விரித்துப் பேசினார்.

பின்னர் திருவள்ளுவனின் பெற்றோர்களாகிய சென்னை மாநிலக் கல்வித் துறை இயக்குநர் திருவள்ளுவன் நினைவாக அளித்த சீராடைகளைக் கல்வித் துறைத் துணை இயக்குநர் உயர்திரு எம்.எம். கனி அவர்கள் இந்துமத பாடசாலையில் படிக்கும் ஏழை மாணவர்கள் 50 பேருக்கு அளித்தார். அதற்குப் பின், கல்வித்துறை இயக்குநர் எழுதிய 'வள்ளுவன் வரிசை' நூல்களைக் கல்வித் துறைத்துணை இயக்குநர் உயர் திரு. பழநிசாமி முதலியார் அவர்கள் சில மாணவர்களுக்கு வழங்கினார்கள்.

பின்பு, தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் எம்.ஏ., அவர்களும், சென்னை நகராட்சி மன்றத்தின் முன்னாள் துணை மேயர் உயர் திரு. பார்த்தசாரதி செட்டியார் அவர்களும் வள்ளுவனைப் பற்றியும் வள்ளுவன் குண நலங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசினார்கள்.

பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

'THE SOUTH INDIAN TEACHER'

மாதாந்திரப் பத்திரிகை

வாசித்தீர்களா ?

திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.,

எழுதுகிறார்

பணம் முளைக்குமா ?

நல்லைக்கவி அ. இளங்கோவன்

1. “அண்ணா அருமை அண்ணா
அறியச் சொல்லு நீயண்ணா
எண்ணி வைக்கும் பணந்தான்
எப்படி வந்தது சொல்லண்ணா !” — தம்பி.

2. “மண்ணில் முளைக்க வைத்தால்
மரமாய் வளர்ந்து காய்க்கும்
எண்ணில் லாத பணமே
என்றன் அருமைத் தம்பியே !” — அண்ணன்.

3. “வீட்டுக் கொல்லைத் தோட்டத்தில்
வேக மாகச் சென்றுநான்
நாட்டி வைப்பேன் பணமே
நன்கு காய்க்கும் தினமே !” — தம்பி.

4. “அண்ணா ! சொன்ன படியே
அருமை யான பணத்தை
மண்ணில் முளைக்க வைத்தேன்
வளர்ந்தி ருக்கும் காணவா !” — தம்பி.

5. “வாடா தம்பி பார்ப்போம் !” — அண்ணன்.
“வைத்த திங்கே தானண்ணா !” — தம்பி.
“ஓடா இங்கு வைத்தாய்?
ஓடிப் போச்சே பணமடா!” — அண்ணன்.

6. “பணம் முளைக்கும் என்று
பையச் சொன்ன பொய்யால்
பணம் தொலைந்து போச்சே
பரித விக்க லாச்சே !” — அண்ணன்.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1